'அம்ரித் பாரத்' திட்டத்தில் சீரமைக்கப்பட்ட

திருவண்ணாமலை, ஸ்ரீரங்கம் உள்பட 13 ரெயில் நிலையங்கள்: பிரதமர் மோடி 22ந்தேதி திறந்து வைக்கிறார்

சென்னை, மே.20

'அம்ரித் பாரத்' திட்டத்தில் சீரமைக்கப்பட்ட திருவண்ணாமலை, ஸ்ரீரங்கம் உள்பட 13 ரெயில் நிலையங்களை வருகிற 22ந்தேதி பிரதமர் மோடி திறந்து வைக்கிறார்.

நாடு முழுவதும் 'அம்ரித் பாரத்' ரெயில் நிலைய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1,300க்கும் மேற்பட்ட ரெயில் நிலையங்கள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அதில், தெற்கு ரெயில்வேயில் உள்ள 90 ரெயில் நிலையங்களை மறுசீரமைக்கும் பணி கடந்த 2023ம் ஆண்டு தொடங்கியது.

சென்னை ரெயில்வே கோட்டத்தில் 17 ரெயில் நிலையங்கள் மறு சீரமைக்கப்பட்டு வருகின்றன. சென்னை கடற்கரை, கிண்டி, பரங்கிமலை, பூங்கா, மாம்பலம், கூடுவாஞ்சேரி, பெரம்பூர், அம்பத்தூர், திருவள்ளூர், அரக்கோணம், திருத்தணி, ஜோலார்பேட்டை, கும்மிடிப்பூண்டி, சூலூர்பேட்டை, குரோம்பேட்டை உள்ளிட்ட ரெயில் நிலையங்களில் மேம்பாட்டுப்பணிகள் தீவிரமாக நடக்கிறது.

பெரும்பாலான ரெயில் நிலையங்களில் மேம்பாட்டு பணிகள் 60 சதவீதம் முடிவடைந்து உள்ளன.

குறிப்பாக மறுசீரமைக்கப்படும் ரெயில் நிலையத்தில் கூடுதல் அறைகள், லிப்ட், நடை மேம்பாலம், கூடுதல் நடைமேடைகள், பயணிகள் காத்திருப்பு அறைகள், நுழைவு வாயில்கள் சீரமைப்பு, நகரும் படிக்கட்டுகள், பன்னடுக்கு வாகன நிறுத்தங்கள், கண்காணிப்பு கேமரா உள்ளிட்ட வசதிகள் இடம்பெற்றுள்ளது.

இதில் கடற்கரை – தாம்பரம் வழித்தடத்தில் பரங்கிமலை ரெயில் நிலையம் முக்கிய ரெயில் நிலையமாக திகழ்கிறது. நாள்தோறும் 200க்கும் மேற்பட்ட மின்சார ரெயில்கள் பரங்கிமலையில் நின்று செல்கின்றன. இந்த ரெயில் நிலையம் ரூ.15 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைக்கப்பட்டு வந்தது. தற்போது பணிகள் அனைத்தும் முடிவடைந்துள்ளன. கூடுதல் அறைகள், நுழைவு வாயில்கள் சீரமைப்பு, முன்பதிவு அலுவலகம், கூடுதல் பயணிகள் இருக்கை, கண்காணிப்பு கேமரா, வாகன நிறுத்த வசதி, டிஜிட்டல் தகவல் பலகை உள்ளிட்டவைகள் அமைக்கப்பட்டு உள்ளன.

இந்த நிலையில், தெற்கு ரெயில்வேயில் அம்ரித் பாரத் ரெயில் நிலைய மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பணிகள் முடிந்துள்ள பரங்கிமலை, சூலூர்பேட்டை உள்பட 13 ரெயில் நிலையங்களை வருகிற 22ந்தேதி பிரதமர் மோடி திறந்து வைக்கிறார்.

பிரதமர் மோடிதிறந்து வைக்கிறார்

இதுகுறித்து தெற்கு ரெயில்வே அதிகாரிகள் கூறியதாவது:– அம்ரித் பாரத் ரெயில் நிலைய மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் பணிகள் முடிவுற்ற 103 ரெயில் நிலையங்களை பிரதமர் மோடி 22 ந்தேதி திறந்து வைக்கிறார். இதில், தெற்கு ரெயில்வேயில் 13 ரெயில் நிலையங்களை திறந்து வைக்க உள்ளார்.

பரங்கிமலை, ஸ்ரீரங்கம், போளூர், திருவண்ணாமலை, விருதாச்சலம், சாமல்பட்டி, குழித்துறை, சூலூர்பேட்டை மற்றும் கேரளாவில் 3 ரெயில் நிலையங்கள் உள்பட 13 ரெயில் நிலையங்களை பொதுமக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைக்கிறார். காணொலி காட்சி வாயிலாக காலை 10 மணியளவில் நிகழ்ச்சி நடைபெறுகிறது. தெற்கு ரெயில்வே சார்பில் இதற்கான நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இவ்வாறு கூறினார்கள்.

ராஜஸ்தான் எல்லையில் இந்திய ராணுவ தளபதி ஆய்வு

ஜெய்சால்மர், மே.20–

இந்தியா–பாகிஸ்தான் இடையே சமீபத்தில் நடந்த ராணுவ மோதலில், இந்தியாவின் மேற்கு எல்லைப்பகுதிகளை பாகிஸ்தான் படைகள் தீவிரமாக தாக்கின. ஆனால் இந்த தாக்குதல் அனைத்தையும் இந்திய படைகள் வெற்றிகரமாக முறியடித்து நாட்டின் எல்லைகளையும், ராணுவ நிலைகளையும் பாதுகாத்தன.

இவ்வாறு பாகிஸ்தானால் இலக்கு வைக்கப்பட்ட ராஜஸ்தானின் லாங்கி வாலா எல்லையில் ராணுவ தளபதி உபேந்திர திவிவேதி நேற்று ஆய்வு செய்தார்.

அங்கு பாகிஸ்தானுடனான எல்லைப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு இருக்கும் பாதுகாப்பு பணிகளை அவர் ஆய்வு செய்தார்.

மேலும் அங்கே விமானப்படை மற்றும் எல்லை பாதுகாப்புப்படையுடன் இணைந்து ராணுவம் மேற்கொண்ட பாதுகாப்பு பணிகளையும் அவர் கேட்டறிந்தார்.

அப்போது ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது துணிச்சலாக போராடிய ராணுவ வீரர்களை பாராட்டினார்.

ராணுவ தளபதியின் வருகையையொட்டி லாங்கிவாலா எல்லைப்பகுதியில் பலத்து பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

மாலத்தீவுக்கு இந்தியா ரூ.55¼ கோடி உதவி: 13 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்து

புதுடெல்லி, மே.20–

மானிய உதவியுடன் கூடிய திட்டங்களை செயல்படுத்த மாலத்தீவுக்கு இந்தியா ரூ.55¼ கோடி உதவி செய்கிறது. இதற்கான 13 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

மாலத்தீவில் இந்திய எதிர்ப்பு பிரசாரம் செய்து ஆட்சியை கைப்பற்றியவர் முகமது முய்சு. சீனாவுடன் நட்புறவு பாராட்டிய அவர், இந்திய விரோத செயல்பாடுகளை அதிகப்படுத்தினார். அங்கு முகாமிட்டு இருந்த இந்திய ராணுவத்தினரை வெளியேற்றினார். தொடர்ச்சியான இந்திய விரோத செயல்பாடுகள், இந்தியாவுக்கு எதிரான மந்திரிகளின் வெறுப்பு பிரசாரம் காரணமாக அங்கு செல்லும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை சரிந்தது. இதனால் அத்தியாவசிய தேவைகளுக்கு பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத அளவுக்கு அன்னிய செலாவணி பற்றாக்குறை ஏற்பட்டது.

இந்த நிலையில் மீண்டும் உதவி கேட்டு இந்தியாவிடம் மாலத்தீவு அரசு வந்தது. இந்தியா கடந்த ஆண்டு வழங்கிய ரூ.420 கோடி அவசர கால நிதியுதவியை, இந்த ஆண்டும் நீட்டிக்கும்படி மாலத்தீவு வேண்டுகோள் விடுத்தது. இதனை ஏற்றுக்கொண்ட இந்தியா ரூ.420 கோடி நிதியுதவி வழங்கி உள்ளது.

இதற்கிடையே மாலத்தீவில் படகு சேவைகளை மேம்படுத்துதல், கடல்சார் இணைப்பை விரிவுபடுத்துதல் மற்றும் சமூக வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கு இந்திய மானிய உதவியின் கீழ் திட்டங்களை செயல்படுத்த இந்தியா, மாலத்தீவுகள் இடையே 13 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

மாலத்தீவு வெளியுறவு அமைச்சகத்தில் மாலத்தீவு அரசின் சார்பாக வெளியுறவு மந்திரி அப்துல்லா கலீலும், மாலத்தீவுக்கான இந்திய தூதர் பாலசுப்பிரமணியனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டனர். திட்டத்தை செயல்படுத்தும் நிறுவனத்தின் சார்பாக போக்குவரத்து மற்றும் சிவில் விமான போக்குவரத்து மந்திரி அகமது அமீன் கையெழுத்திட்டார்.

அப்போது பேசிய மாலத்தீவு வெளியுறவு மந்திரி அப்துல்லா கலீல் ''இந்தியாவின் உதவி எப்போதும் அர்த்தமுள்ளதாகவும், மாலத்தீவு மக்களின் தேவைகளுடன் இணைந்து போகும் வகையிலும் உள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான நீடித்த பிணைப்பை பிரதிபலிக்கிறது'' என்று கூறினார்.

இதுகுறித்து மாலத்தீவு வெளியுறவு மந்திரி அப்துல்லா கலீல் வெளியிட்ட எக்ஸ் தள பதிவில், "சமூகங்களுக்கான உயிர்நாடிகள், வாய்ப்புகளுக்கான பாதைகளை உருவாக்குதல், உள்ளூர் சவால்களை தீர்ப்பது மற்றும் நீடித்த சமூக பொருளாதார முன்னேற்றத்தை ஆதரிக்கும் தாராளமான உதவிக்காக இந்திய அரசுக்கும், இந்திய மக்களுக்கும் நன்றி" என கூறியுள்ளார்.

மாலத்தீவுக்கான இந்திய தூதர் பாலசுப்பிரமணியன் வெளியிட்ட பதிவில் ''மாலத்தீவில் படகு சேவைகளை மேம்படுத்துவதற்காக மொத்தம் ரூ.55¼ கோடி (100 மில்லியன் மாலத்தீவு ரூபியாக்கள்) மானியத்துடன் 13 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டன. மாலத்தீவு மக்களின் உயிர்நாடியான கடல்சார் இணைப்பை மேம்படுத்துவதில் மாலத்தீவு அரசுடன் இணைந்து செயல்படுவதில் இந்தியா மகிழ்ச்சியடைகிறது'' என தெரிவித்துள்ளார்.

முல்லைப்பெரியாறு அணையை பராமரிக்க அனுமதி அளிக்க வேண்டும்: மத்திய அரசு, கேரள அரசுக்கு சுப்ரீம் கோர்ட் அதிரடி உத்தரவு

புதுடெல்லி, மே.20

முல்லைப்பெரியாறு அணையை பராமரிக்கவும், மரங்களை வெட்டவும் அனுமதி அளிக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கும், கேரள அரசுக்கும் சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது.

முல்லைப்பெரியாறு அணை பராமரிப்பு தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டில் தமிழ்நாடு அரசு மனு தாக்கல் செய்துள்ளது. அந்த மனுவில் கூறியிருப்பதாவது:– முல்லைப்பெரியாறு அணையை பலப்படுத்தவும். பராமரிப்பு பணிகளுக்கும் மரங்களை வெட்ட தமிழக அரசை அனுமதிக்க கேரள அரசுக்கு உத்தரவிட வேண்டும். முல்லைப்பெரியாறு அணையில் பராமரிப்பு பணிகளுக்கான பொருட்களை எடுத்துச் செல்ல தமிழகத்துக்கு அனுமதிக்க கேரள அரசுக்கு உத்தரவிட வேண்டும்.

அணைப்பகுதியில் உள்ள வல்லக்கடவு – முல்லைப்பெரியார் காட்டுச் சாலையை சீரமைக்க கேரள அரசுக்கு உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழ்நாடு அரசு சார்பில் காவிரி தொழில்நுட்பக் குழுவின் துணைத்தலைவர் எம். செல்வராஜ் சார்பில் தாக்கல் செய்துள்ள விளக்க மனுவில் கூறப்பட்டுள்ளதாவது

முல்லைப்பெரியாறு அணையை பலப்படுத்தவும். பராமரிப்பு பணிகளுக்கும் மரங்களை வெட்ட தமிழக அரசை அனுமதிக்க கேரள அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்ற கோரிக்கையை பொறுத்தவரை. பர்வேஷ் இணையத்தில் தமிழ்நாடு அரசு விண்ணப்பித்தது. ஆனால் இதற்கான அனுமதியை கேரள அரசு தன்னிச்சையாக 2021, நவம்பர் 11ந்தேதி திரும்ப பெற்றுக்கொண்டது.

இதைத்தொடர்ந்து மீண்டும் பதிவு செய்த விண்ணப்பத்தின் மீது கேரள அரசு இதுவரை பதில் அளிக்கவில்லை. பராமரிப்பு பணிகளுக்காக 15 மரங்களை வெட்ட வேண்டிய அவசியம் உள்ளதால், கடந்த 11 ந்தேதி மீண்டும் தமிழ்நாடு அரசு பரிவேஷ் இணையத்தில் விண்ணப்பித்துள்ளது. ஆனால் இது போன்ற பராமரிப்பு பணிகளுக்கு கேரளா முட்டுக்கட்டை போட்டு வருகிறது. பருவ மழை பெய்யாத காலத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஏதுவாக இருக்கும் என்பதால், இது தொடர்பான உத்தரவை சுப்ரீம் கோர்ட் கேரள அரசுக்கு பிறப்பிக்க வேண்டும்' என அதில் தெரிவித்துள்ளார்.

இதனிடைய இந்த விவகாரம் தொடர்புடைய மனுக்களை சுப்ரீம் கோர்ட் நேற்று மீண்டும் விசாரித்தது. இருதரப்பு வாதங்களையும் பதிவு செய்து கொண்ட சுப்ரீம் கோர்ட் பிறப்பித்த உத்தரவுகள் வருமாறு:– முல்லைப்பெரியாறு அணை பராமரிப்பு பணிகளுக்காக 15 மரங்களை வெட்ட கடந்த 11ந்தேதி மீண்டும் தமிழ்நாடு அரசு 'பரிவேஷ்' இணையத்தில் கோரியுள்ள விண்ணப்பத்தின் மீது கேரள அரசு 2 வாரங்களுக்குள் முடிவு எடுத்து மத்திய அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும். இவ்வாறு அனுப்பி வைக்கும் முடிவு மீது மத்திய அரசு 3 வாரங்களுக்குள் எடுக்க வேண்டும். எஞ்சியுள்ள 3 பராமரிப்பு பணிகளுக்கு கேரளா அனுமதிக்க வேண்டும். பராமரிப்பு பணியின்போது கேரள செயற்பொறியாளருடன் இருக்க வேண்டும், முல்லைப்பெரியாறு அணைப்பகுதியில் உள்ள வல்லக்கடவு முல்லைப் பெரியாறு காட்டுச் சாலையை கேரள அரசே 4 வாரங்களுக்குள் சீரமைக்க வேண்டும். சாலையை செப்பனிட சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களை கேரளாவே பயன்படுத்த வேண்டும். சாலை செப்பனிடும்போது தமிழக அதிகாரி உடனிருக்க வேண்டும். இதற்கான செலவை தமிழ்நாடு அரசு ஏற்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்
பதிவு அலுவலகம் : 501, சல்கான் ஆரம், ஜசோலா மாவட்ட மையம், புதுடெல்லி –110025
CIN : U65900DL2020PLC366027

ஏல அறிவிப்பு

வங்கியினால் வழங்கப்பட்ட தனிப்பட்ட அறிவிப்புகள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் அனுப்பியபோதிலும், வங்கியிடமிருந்து பெற்ற தங்க நகை கடன்/கள் அவர்களால் சரி செய்யப்படவில்லை என்பதை ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்டின் கீழ்க்கண்ட கடன்தாரர்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். வங்கியில் செக்யூரிட்டியாக வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளை ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது, அதன்படி **காலை 11:00 மணிக்கு** கடன் பெற்ற கிளை வளாகத்தில் ஏலம் விடப்படும் என்று அனைத்து கடன்தாரர்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி கடன் வாங்கியவர்கள், கணக்கு வைத்திருப்பவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட அனைவரும் இந்த ஏலத்தில் பங்கேற்கலாம்.

ஏலத் தேதி 29 மே, 2025 அன்று காலை 11.00 மணி

வ. எண்.	கிளை	கணக்கு எண்	கணக்கு வைத்திருப்பவர் பெயர்
1	சென்னை	104142511592	கார்த்திக் குணசேகர்
2	சென்னை	104142510949	விமல்ராஜ் எம்
3	சென்னை	104142511615	சண்முகசுந்தர லக்ஷ்மிகாந்தன்
4	சென்னை	104142511611	சிவவிக்னேஷ்வர்
5	சென்னை	104142511306	கோபு கே ஆர்
6	சென்னை	104142511315	பிரமோத் எப்
7	சென்னை	104142511591	எம் ஏ சுல்பீனா
8	சென்னை	104142511594	ஷாலினி வி
9	சென்னை	104142511614	ஜேக்கப் கே
10	சென்னை	104142511637	பொன்னியம்மாள்
11	சென்னை	104142511660	ரம்யா கண்ணன்
12	சென்னை	104142511659	மணிகண்டன்
13	சென்னை	104142511672	ஆர் எஸ் குமார்
14	சென்னை	104142511674	சரஸ்வதி வி
15	சென்னை	104142511511	ஆனந்த் பட்டத்தில்
16	சென்னை	104142511795	உமாமகேஸ்வரி பாலகிருஷ்ணன்
17	சென்னை	104142512090	கார்த்திக் டி
18	சென்னை	104142512191	திருமதி. வாசுகி கே.
19	சென்னை	104142512218	ஏ. ஸ்ரீதேவி
20	சென்னை	104142512331	சிங்காரவேலு ஏ ஆர்
21	சென்னை	104142512395	ராவுரி ராகேஷ்

எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி ஏலத்தில் இருந்து எந்தவொரு கணக்கையும் நீக்க அல்லது ஏலத்தை ரத்து செய்ய வங்கிக்கு உரிமை உள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.

ஓரிக்ஸ் லீசிங் & பைனான்சியல் சர்வீசஸ் இந்தியா லிமிடெட்
(முன்னர் ஓரிஸ் ஆட்டோ பைனான்ஷியல் சர்வீஸஸ் லிமிடெட்)
(ஓரிக்ஸ் ஆட்டோ இன்பிராஸ்ட்ரக்சர் சர்வீசஸ் லிமிடெட்டின் துணை நிறுவனம்)
பதிவு அலுவலகம்: மனை எண்.94, மாரோல் கூட்டுறவு தொழிற்பேட்டை, அந்தேரி – குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை – 400 059. தொலைபேசி எண்: +91 22 2859 5093/6707 0100, பேக்ஸ் : +91 22 2852 8549
மின்னஞ்சல் : info@orixindia.com | www.orixindia.com | CIN : U74900MH2006PLC163937

(கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு)

கீழ்க்கண்ட கடன்தாரர்கள் மற்றும் உடன் கடன்தாரர்கள் ஓரிக்ஸ் லீசிங் & பைனான்சியல் சர்வீசஸ் இந்தியா லிமிடெட்டில் கீழ்க்குறிப்பிட்டுள்ள ஈடுபெற்ற கடன்களை பெற்றிருந்தனர். கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் உடன் கடன்தாரர்கள் பெற்ற கடனுக்கு ஈடாக உரிய சொத்துக்கள் அடமானமாக பெறப்பட்டது. கடன் ஒப்பந்தங்களில் உள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளை கடைபிடிக்க மற்றும் ஒழுங்காக திரும்ப செலுத்த அவர்கள் தவறிவிட்டனர். ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவின் வழிகாட்டுதலின்படி அவர்களின் கடன்கள் என்பிர ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் ஓரிக்ஸ் லீசிங் & பைனான்சியல் சர்வீசஸ் இந்தியா லிமிடெட்டிற்கு கீழ்க்கண்ட அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளபடி அனுப்பப்பட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள செலுத்த வேண்டிய பாக்கித் தொகை மற்றும் மேற்சொன்ன தொகையின் மீது அந்தந்த தேதிகளிலிருந்து ஒப்பந்தப்படியான மற்றும் பொருந்தக்கூடிய மேலும் வட்டி ஆகியவை கீழே அளிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	கடன் கணக்கு எண்.	கடன் வகை	கடன்தாரர்கள் பெயர்	13(2) அறிவிப்பு படி செலுத்த வேண்டிய தொகை	அறிவிப்பு தேதி
1	LN0000000013263	SME ஈடுபெற்ற கடன்	1. எம் அப்துல் ரஹ்மான் யொசாத் 2. ஃபர்சானா பேகம் ஏ	ரூ. 6,52,849.23/-	17.05.2025

ஈடுபெற்ற ஆஸ்தி குறித்த விவரம்: அயிட்டம் எண்.1: சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். ஓ.எஸ் எண்.6641, விஸ்தீரணம் 528 சதுர அடி, ஆர்.எஸ் எண்.1235/1, புதிய ஆர்.எஸ்.எண்.1235/12, முத்தியால்பேட்டை கிராமம் (வ.உ.சி. நகர் டிவிஷன்), கதவு எண்.20/2, புதிய கதவு எண்.28, மங்கம்மாள் சந்து, ஏழு கிணறு, ஜார்ஜ் டவுன், சென்னை 600001. மற்றும் எல்லைகள்: கிழக்கு: பொன்னுரங்கம் பிள்ளையின் சொத்து ஆர்.எஸ்.எண்.1235/17, மேற்கு: வீரராசாமியின் சொத்து ஆர்.எஸ்.எண்.1235/16, வடக்கு: மங்கம்மாள் சந்து ஆர்.எஸ்.எண்.1235/1, தெற்கு: ராமசாமியின் சொத்து ஆர்.எஸ்.எண்.1235/16

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாக்கித்தொகை மற்றும் அந்தந்த தேதிகளிலிருந்து ஒப்பந்தப்படியான விகிதத்தில் வட்டி மற்றும் இதர கட்டணங்களை இந்த அறிவிப்பு வெளியான 60 நாட்களுக்குள் ஓரிக்ஸ் லீசிங் & பைனான்சியல் சர்வீசஸ் இந்தியா லிமிடெட்டிற்கு செலுத்துமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். அவ்வாறு செலுத்த தவறும்பட்சத்தில் ஓரிக்ஸ் லீசிங் & பைனான்சியல் சர்வீசஸ் இந்தியா லிமிடெட்டிற்கு செலுத்த வேண்டிய தொகையை பெறுவதற்கு குறிப்பிடப்பட்டுள்ள அடமான சொத்துக்களின் மீது கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(4) மற்றும் பிரிவு 14ன் கீழ் நடவடிக்கைகளை கீழ்க்கையொப்பிட்டவர் மேற்கொள்வார். மேற்சொன்ன சட்டப்பிரிவு 13(13)ன்படி மேற்சொன்ன ஈடுபெற்ற ஆஸ்திகளை விற்றல்/குத்தகைக்கு விடுதல் அல்லது இதர வகையில் ஈடுபட உங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்பதை அறியவும்.

ஒப்பம்/–
தேதி: 17.05.2025 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம்: சென்னை ஓரிக்ஸ் லீசிங் & பைனான்சியல் சர்வீசஸ் இந்தியா லிமிடெட்

வெராண்டா லேர்னிங் சொல்யூஷன்ஸ் லிமிடெட்
(CIN: L74999TN2018PLC125880)
பதிவு அலுவலகம் : ஜி.ஆர் வளாகம், முதல் தளம், எண்.807-808, அண்ணாசாலை, நந்தனம், சென்னை, தமிழ்நாடு, 600035. Ph: 044-4296 7777 | www.verandalearning.com

1வது அசாதாரண பொதுக் கூட்ட அறிவிப்பு (EGM 2025-26)

வெராண்டா லேர்னிங் சொல்யூஷன்ஸ் லிமிடெட் ("நிறுவனம்") உறுப்பினர்களின் 1வது அசாதாரண பொதுக் கூட்டம் ("EGM") ஜூன் 10, 2025 செவ்வாய்க்கிழமை அன்று நண்பகல் 12:00 மணிக்கு (இந்திய நேரப்படி) காணொளி காட்சி (VC)/பிற ஆடியோ காட்சி வழிமுறைகள் (OAVM) மூலம் அசாதாரண பொதுக் கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி சிறப்பு வணிகத்தை பரிவர்த்தனை செய்ய நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. இது செப்டம்பர் 19, 2024 தேதியிட்ட பொது சுற்றறிக்கை மற்றும் கார்ப்பரேட் விவகார அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட முந்தைய சுற்றறிக்கைகள் ("MCA சுற்றறிக்கைகள்"), செக்யூரிட்டிஸ் அன்ட் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியாவின் (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) ஒழுங்கு முறைகள் 2015 (செபி எல்ஓடிஆர்) ஒழுங்குமுறை 44 மற்றும் பிற பொருந்தக்கூடிய விதிகள், செபியால் வெளியிடப்பட்ட டிசம்பர் 13, 2024 தேதியிட்ட தொடர்புடைய சுற்றறிக்கைகள் (செபி சுற்றறிக்கைகள்) மற்றும் முந்தைய செபி சுற்றறிக்கைகள் ஆகியவற்றுக்கு இணங்க வழங்கப்படுகிறது. அசாதாரண பொதுக் கூட்டத்தை (EGM) கூட்டுவதற்கான அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வணிகம்(கள்) தொடர்பாக வெராண்டா லேர்னிங் சொல்யூஷன்ஸ் லிமிடெட் அதன் உறுப்பினர்களின் ஒப்புதலைக் கோருகிறது.

மேற்கண்ட எம்சிஏ மற்றும் செபி சுற்றறிக்கைகளுக்கு இணங்க, நிறுவனம் அல்லது பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் அல்லது அந்தந்த டெபாசிட்டரி பங்கேற்பாளர் (கள்) ஆகியோரிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் அசாதாரண பொதுக்கூட்ட அறிவிப்பு 19 மே, 2025 அன்று மின்னணு முறையில் மட்டுமே அனுப்பப்பட்டுள்ளது.

தொலைதூர மின்னணு வாக்களிப்பு:

நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 108ன் விதிகள் மற்றும் நிறுவனங்களின் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) திருத்த விதிகள், 2015ன் விதி 20 மற்றும் செபி எல்ஓடிஆர் ஆகியவற்றுக்கு இணங்க, நிறுவனம் அதன் உறுப்பினர்களுக்கு, CDSL வழங்கும் தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் அசாதாரண பொதுக் கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வணிகங்களிலும் மின்னணு வழிமுறைகள் மூலம் அசாதாரண பொதுக் கூட்டத்தில் (EGM) வாக்களிக்கும் உரிமையை வழங்குகிறது. தொலைதூர மின்னணு வாக்களிக்கும் வசதிக்கான விரிவான வழிமுறைகள் உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்ட அசாதாரண பொதுக் கூட்ட அறிவிப்பில் உள்ளன.

நிறுவனங்கள் சட்டம், 2013ன் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின்படி விவரங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன:

a. அசாதாரண பொதுக் கூட்டத்தில் மின்னணு முறையில் வாக்களிப்பதற்கான தகுதியை நிர்ணயிக்கும் கட்ஆஃப் தேதி **ஜூன் 03, 2025, செவ்வாய்க்கிழமை** ஆகும்.

b. தொலைதூர மின்னணு வாக்களிப்பு **ஜூன் 07, 2025, சனிக்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு (இந்திய நேரப்படி) துவங்கி ஜூன் 09, 2025 திங்கட்கிழமை அன்று மாலை 5.00 மணிக்கு (இந்திய நேரப்படி)** முடிவடைகிறது. அதனைத் தொடர்ந்து மின்னணு வாக்களிப்பு தொகுதி CDSL–ஆல் முடக்கப்படும்.

c. VC/OAVM வசதி மூலம் அசாதாரண பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்கள் மற்றும் தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் தீர்மானங்களில் வாக்களிக்காதவர்கள் மற்றும் அவ்வாறு செய்வதிலிருந்து தடை செய்யப்படாத உறுப்பினர்கள், அசாதாரண பொதுக் கூட்டத்தின் போது மின்னணு வாக்களிப்பு முறை மூலம் வாக்களிக்கத் தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

d. அசாதாரண பொதுக் கூட்டத்திற்கு முன்னதாக தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் VC/OAVM மூலம் அசாதாரண பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம்/பங்கேற்கலாம் ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமை பெற மாட்டார்கள்.

e. அறிவிப்பை அனுப்பிய பிறகு நிறுவனத்தின் பங்கை வாங்கி, நிறுவனத்தின் உறுப்பினராகி, கட்ஆஃப் தேதி அன்று பங்குகளை வைத்திருக்கும் எந்தவொரு நபரும், helpdesk.evoting@cdslindia.com–க்கு கோரிக்கையை அனுப்புவதன் மூலம் பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லைப் பெறலாம். இருப்பினும், ஒரு நபர் ஏற்கனவே CDSL–ல் மின்னணு வாக்களிப்புக்காக பதிவு செய்திருந்தால், ஏற்கனவே உள்ள பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லை வாக்களிக்கப் பயன்படுத்தலாம்.

f. மின்னணு வாக்குப்பதிவு, VC/OAVM வசதி மூலம் அசாதாரண பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்வது மற்றும் பங்குதாரரால் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்வது போன்ற நடைமுறைகள் அசாதாரண பொதுக்கூட்ட அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளன. இது நிறுவனத்தின் இணையதளம் www.verandalearning.com, சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் இந்தியா லிமிடெட்டின் இணையதளம். www.evotingindia.com மற்றும் பங்குச் சந்தைகளின் இணையதளம், அதாவது, பிஎஸ்இ லிமிடெட்டின் www.bseindia.com மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ்ச் லிமிடெட்டின் www.nseindia.comல் கிடைக்கும்.

g. மின்னணு வாக்குப்பதிவு தொடர்பான ஏதேனும் கேள்விகள் அல்லது குறைகள் இருந்தால், உறுப்பினர்கள் திரு. ராகேஷ் தல்வி, மூத்த மேலாளர் (CDSL) சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட், ஏ விங், 25வது தளம், மராத்தான் ஃப்யூச்சர்க்ஸ், மஃபல்லால் மில் காம்பவுண்ட்ஸ், என் எம் ஜோஷி மார்க், லோயர் பரேல் (கிழக்கு), மும்பை 400013–ல் தொடர்பு கொள்ளலாம் அல்லது helpdesk.evoting@cdslindia.comக்கு மின்னஞ்சல் அனுப்பலாம் அல்லது 1800225533 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**வெராண்டா லேர்னிங் சொல்யூஷன்ஸ் லிமிடெ